பிரசார்பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**17 08 2026 MONDAY 6.30 PM**

<u>மாநிலச்செய்திகள்</u>

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1)** தீவிரவாதத்தை ஒடுக்குவதில் மத்திய அரசு உறுதியுடன் செயல்பட்டு வருவதாக உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறியுள்ளார்.

**2)** தேசிய தேர்வு முகமையின் செயல்பாடுகள் குறித்து மத்திய கல்வி அமைச்சர் திரு பிரல்ஹாத் ஜோஷி இன்று புதுதில்லியில் அதிகாரிகளுடன் ஆய்வு மேற்கொண்டார்.

**3)** கிராமநத்த காலி மனைகளில் வீடு கட்டி வசித்துவரும் தகுதிவாய்ந்தவர்களுக்கு வீட்டுமனை பட்டா வழங்கப்படும் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது.

**4)** காவிரி மேலாண்மை ஆணையத்தின் உத்தரவினை கர்நாடக அரசு நிறைவேற்ற வேண்டும் என்று உச்சநீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது.

**5)** உலக பேட்மிண்டன் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் பி வி சிந்து இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

--இனி விரிவான செய்திகள்---

<<<<<<>>>>>>

தீவிரவாதத்தை ஒடுக்குவதில் மத்திய அரசு உறுதியுடன் செயல்பட்டு வருவதாக உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், சுதந்திர தின கொண்டாட்டங்களை சீர்குலைக்க திட்டமிட்டிருந்த ஐ எஸ் ஐ ஆதரவிலான தீவிரவாத அமைப்பின் செயலை பாதுகாப்புப்படையினர் வெற்றிகரமாக முறியடித்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பாக பாதுகாப்புப்படையினர் 14 மாநிலங்களில் மேற்கொண்ட நடவடிக்கைகளில் 200-க்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டிருப்பதாக அவர் கூறியுள்ளார்.

தீவிரவாத செயல்களுக்கு எதிரான உறுதியான நடவடிக்கைகளுக்கு எடுத்துக்காட்டாக இது திகழ்கிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட இந்த நடவடிக்கையின்போது ஏராளமான ஆயுதங்கள் பறிமுதல் செய்யப்பட்டிருப்பதாகவும் திரு அமித் ஷா கூறியுள்ளார்.

<<<<<<>>>>>>

மின்னணு உதிரி பாகங்கள் திட்டத்தின்கீழ், 31 திட்டங்களுக்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

இன்று புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மத்திய அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் இதற்கான ஆணைகளை சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு வழங்கினார்.

இதன்மூலம், 7 ஆயிரம் கோடி ரூபாய்க்கும் கூடுதலான முதலீடுகள் கிடைக்கும் என்றும், 10 ஆயிரம் வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும் என்றும் மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

<<<<<<>>>>>>

தேசிய தேர்வு முகமையின் செயல்பாடுகள் குறித்து மத்திய கல்வி அமைச்சர் திரு பிரல்ஹாத் ஜோஷி இன்று ஆய்வு மேற்கொண்டார்.

புதுதில்லியில் நடைபெற்ற இந்த ஆய்வுக்கூட்டத்தின்போது தேர்வு நடைமுறைகள் குறித்து முழுமையாக தணிக்கை மேற்கொள்ள அமைச்சர் அறிவுறுத்தியதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இதுதொடர்பான அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என்றும் அமைச்சர் இந்த கூட்டத்தில் வலியுறுத்தியதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த ஆய்வின்போது, தேசிய தேர்வு முகமையின் 50 சதவீத பணியாளர்கள் மாற்றப்பட்டுள்ளதாகவும், பத்து தலைமை பொறுப்புகளுக்கு புதியவர்களை தேர்ந்தெடுப்பதற்கான நடவடிக்கைகள்

தொடங்கப்பட்டுள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்ததாக அந்த செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

நாட்டின் மதிப்புமிக்க சொத்தாக ஓய்வூதியதாரர்கள் திகழ்கிறார்கள் என்று பணியாளர் நலத்துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் அரசுத்துறையில் சிறப்பாக பணியாற்றியவர்களுக்கான விருதுகளை வழங்கி அவர் பேசினார்.

வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதற்கான முதன்மை கட்டமைப்பாளர்களாக ஓய்வூதியதாரர்கள் உள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஓய்வூதியதாரர்கள் நலனில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதாகவும் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

கிராமநத்த காலி மனைகளில் வீடு கட்டி வசித்துவரும் தகுதிவாய்ந்தவர்களுக்கு வீட்டுமனை பட்டா வழங்கப்படும் என்று வருவாய்த்துறை அமைச்சர் திரு கே ஏ செங்கோட்டையன் அறிவித்துள்ளார்.

இன்று பேரவையில் தமது துறை மானியக்கோரிக்கை மீதான விவாதத்திற்கு பதிலளித்து பேசுகையில் பல்வேறு அறிவிப்புகளை அவர் வெளியிட்டார்.

***(Sound Byte — செங்கோட்டையன் - 60 Sec.)***

<<<<<<>>>>>>

தமிழகத்திற்கு தண்ணீர் திறந்துவிட வேண்டும் என்ற காவிரி மேலாண்மை ஆணையத்தின் உத்தரவினை கர்நாடக அரசு நிறைவேற்ற வேண்டும் என்று உச்சநீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது .

இதுதொடர்பாக தமிழக அரசு தாக்கல் செய்த மனுவினை விசாரணை செய்த நீதிபதிகள் திரு விக்ரம் நாத், திரு Sandeep Mehta அமர்வு இதற்கான உத்தரவினை பிறப்பித்தது.

இவ்வழக்கின் விசாரணை வரும் 24-ஆம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

தமிழகத்தில் போதைப்பொருள் பயன்பாட்டினால் நடைபெறும் குற்றச்செயல்களை தடுக்க தவெக அரசு உறுதியான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்று பாமக தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், காஞ்சிபுரம் மாவட்டம் படுநெல்லி கிராமத்தில் கோவில் திருவிழாவின்போது மதுபோதையால் ஏற்பட்ட மோதல் காரணமாக இருவர் கொலை செய்யப்பட்ட சம்பவத்தை சுட்டிக்காட்டியுள்ளார்.

மாநிலத்தில் கடந்த ஐந்தாண்டுகளில் போதைப்பொருள் பயன்பாடு காரணமாக குற்றச்செயல்கள் அதிகரித்ததால் கடந்த ஆட்சியை மக்கள் நிராகரித்ததாக கூறியுள்ளார்.

புதிதாக பொறுப்பேற்றுள்ள தவெக ஆட்சியிலும் இதேநிலை தொடர்வது ஏற்புடையது அல்ல என்றும் டாக்டர் அன்புமணி ராமதாஸ் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>>

வடசென்னை பகுதியில் சுற்றுச்சூழல் பாதுகாப்பை உறுதி செய்து, மீன்வளம் மற்றும் மீனவர்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்க தேவையான நடவடிக்கைகளை தவெக அரசு மேற்கொள்ள வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச்செயலாளர் திரு வீரபாண்டியன் வலியுறுத்தியுள்ளார்.

இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் இக்கோரிக்கையை விடுத்துள்ள அவர், கொசஸ்தலை ஆற்றில் டன் கணக்கில் மீன்கள் செத்து மிதந்தது அதிர்ச்சி அளிப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு, அது தொடர்பான அறிக்கையை பொதுவெளியில் வெளியிட வேண்டும் என்றும் அவர் கோரியுள்ளார்.

இந்த செயற்கை பேரிடர் சம்பவத்திற்கு காரணமானவர்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் திரு வீரபாண்டியன் அந்த அறிக்கையில் கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<<<>>>>>>

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த மூன்று தினங்களுக்கு கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையத்தின் தென் மண்டல இயக்குநர் டாக்டர் வி ஆர் துரை தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

***(Sound Byte — வி ஆர் துரை - 27 Sec.)***

<<<<<<>>>>>>

*மாவட்டச் செய்திகள்*

செங்கல்பட்டு மாவட்டம் புத்தூர் ஏரி கால்வாய் புனரமைக்கும் பணியினை மாநில அமைச்சர் திரு ஆனந்த் இன்று தொடங்கிவைத்தார்.

--------------------

நாமக்கல் மாவட்டத்தில் பொதுமக்களிடமிருந்து பெறப்படும் மனுக்கள் மீது உடனுக்குடன் நடவடிக்கை எடுக்குமாறு ஆட்சியர் திரு மதுபாலன் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

--------------------

நாகப்பட்டினம் பேருந்து நிலையத்தில் மகளிர் சுயஉதவிக்குழுக்கள் உற்பத்தி செய்த பொருட்களின் விற்பனையகத்தை ஆட்சியர் திரு பிரவீன்குமார் இன்று தொடங்கிவைத்தார்.

--------------------

சேலம் ரயில்வே கோட்டம் சார்பில் அயோத்தியாபட்டினத்தில் ரயில் பெட்டி உணவகம் தொடங்கப்பட்டுள்ளது.

--------------------

வடசென்னை பகுதிக்கு உட்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கான சிறப்பு குறைதீர் கூட்டம் பெரம்பூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் வரும் 20-ஆம் தேதி நடைபெறும் என்று சென்னை மாவட்ட ஆட்சியர் திருமதி மாலதி ஹெலன் அறிவித்துள்ளார்.

---------------

சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட அண்ணா நகர் மண்டலத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை துணை ஆணையாளர் திரு கௌஷிக் இன்று ஆய்வு செய்தார்.

<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

உலக பேட்மிண்டன் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் பி வி சிந்து இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், **21-7, 21-11** என்ற செட் கணக்கில், அயர்லாந்தின் **Sophia Noble-**ஐ வென்றார்.

மகளிர் இரட்டையர் பிரிவில் **Tressa Jolly — Gayatri Gopichand** இணையும், ஆடவர் இரட்டையர் பிரிவில் அர்ஜுன் — ஹரிஹரன் அம்சகருணன் இணையும் இரண்டாவது சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளது.

-------------

அஜர்பைஜான் ஜுனியர் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Vaidehi Kalidasan** வெண்கலப்பதக்கம் வென்றார்.

மகளிர் ஒற்றையர் பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

----------------

அமெரிக்காவில் நடைபெற்றுவரும் **Sinquefield** கோப்பைக்கான செஸ் போட்டியின் ஆறாவது சுற்று முடிவில இந்தியாவின் பிரக்யானந்தா தொடர்ந்து இரண்டாவது இடத்தில் உள்ளார்.

-------------

இலங்கைக்கு எதிரான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்தியா வலுவான நிலையில் உள்ளது.

**Galle**-ல் நடைபெற்றுவரும் இப்போட்டியின் மூன்றாம் நாளான இன்று ஆட்டநேர இறுதியில இலங்கை அணி முதல் இன்னிங்சில் **284** ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

முன்னதாக, **9** விக்கெட் இழப்பிற்கு **460** ரன் என்ற நேற்றைய ஸ்கோருடன் முதல் இன்னிங்சை தொடர்ந்து ஆடிய இந்தியா **462** ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

-----------

உலகக்கோப்பை ஹாக்கிப் போட்டியின் ஆடவர் பிரிவில் இந்தியா — இங்கிலாந்து இடையேயான ஆட்டம் நெதர்லாந்தின் **Amstelveen**-ல் சற்றுமுன் தொடங்கியது.

<<<<<<**END**>>>>>>